


## எமது தேசத்திற்கும் அதனது மக்களுக்கும் செழுமையைப் பெற்றுத்தர நாம் ஒரு பயணத்தில் இருக்கின்றோம். நீங்கள் அதனொரு பங்காளராக இருக்க விரும்புகிறீர்களா???

நாடு முழுவதும் 272 கிளை வலையமைப்பினையுடையதும் 3000 இற்கும் மேற்பட்ட மனிதவலுவினையுடையதுமான இலங்கையின் முதன்மை அரச அபிவிருத்தி வங்கியாகிய பிரதேசஅபிவிருத்தி வங்கியிலுள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவி வெற்றிடத்திற்குத் தேவையான தகைமைகளுடன், பெறுபேற்றினை முதன்மைப்படுத்தும் திறமை மிக்கவர்களிடமிருந்துவிண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### தொழில்நுட்ப அதிகாரி : இலத்திரனியல் (MEP) பிராந்திய அலுவலதத்திற்கான 04 வெற்றிடங்கள்

**அடிப்படைத் தகுதிகள்**

1. இலத்திரனியல் பொறியியல் துறைக்கான தேசிய தொழில்நுட்ப டிப்ளோமாவொன்று (NDT) அல்லது இணையான தகுதியொன்றுடன் குறைந்த பட்சம் 05 வருடகால முன்னனுபவத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
2. கட்டிட பராமரிப்பு மற்றும் திருத்தப்பணி, இயந்திரம், மின், நீர் குழாய் தொழில்நுட்ப (MEP) பிரிவுகளிலான முன்னனுபவம் கட்டாயமாகும்.
3. நீர் குழாய் தொழில்நுட்பம், வளிச்சீராக்கி, CCTV, பாதுகாப்பு கட்டமைப்பு, ஜெனரேட்டர், தீ கண்டறிதல் மற்றும் தீயணைப்பு பாதுகாப்பு கட்டமைப்பு, பெயர் பலகை மற்றும் மொனோபோல் பராமரிப்பு நடவடிக்கைகள் தொடர்பில் முன்னனுபவம் பயனுள்ளதாக அமையும்.
4. கணினி அறிவு கட்டாயமாகும். MS Office மற்றும் AutoCAD மென்பொருள் தொடர்பான அறிவு காணப்பட வேண்டியதுடன் செயற்திட்ட முகாமைத்துவ மென்பொருள் தொடர்பாகவும் திறமை காணப்படுவது பயனுள்ளதாக அமையும்.
5. வயது : 35 வருடங்கள் அல்லது அதற்கு குறைவாக இருத்தல் வேண்டும்.

### தொழில்நுட்ப அதிகாரி : (சிவில்) பிராந்திய அலுவலகத்திற்கான 04 வெற்றிடங்கள்

**அடிப்படைத் தகுதிகள்**

1. சிவில் பொறியியலாளர் துறைக்கான தேசிய தொழில்நுட்ப டிப்ளோமாவொன்று (NDT) அல்லது இணையான தகுதியொன்றுடன் குறைந்த பட்சம் 05 வருடகால முன்னனுபவத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
2. கட்டிட நிர்மாணம், கட்டிட வடிவமைப்பு மற்றும் கட்டிட பராமரிப்பு மற்றும் திருத்தப்பணிகளில் முன்னனுபவம் கட்டாயமாகும்.
3. நீர் குழாய் தொழில்நுட்பம், வளிச்சீராக்கி, CCTV, பாதுகாப்பு கட்டமைப்பு, ஜெனரேட்டர், தீ கண்டறிதல் மற்றும் தீயணைப்பு பாதுகாப்பு கட்டமைப்பு, பெயர் பலகை மற்றும் மொனோபோல் பராமரிப்பு நடவடிக்கைகள் தொடர்பில் முன்னனுபவம் பயனுள்ளதாக அமையும்.
4. கணினி அறிவு கட்டாயமாகும். MS Office மற்றும் AutoCAD மென்பொருள் தொடர்பான அறிவு காணப்பட வேண்டியதுடன் செயற்திட்ட முகாமைத்துவ மென்பொருள் தொடர்பாகவும் திறமை காணப்படுவது பயனுள்ளதாக அமையும்.
5. **வயது :** 35 வருடங்கள் அல்லது அதற்கு குறைவாக இருத்தல் வேண்டும்

**சேவை நிபந்தனைகள்**

- அடிப்படையில் 02 வருடங்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்படுவர்.
- ஒப்பந்த சேவைக் காலத்தினை வெற்றிகரமாக பூர்த்தி செய்த விண்ணப்பதாரி உதவி முகாமையாளர் (Officer Grade -3 III) நிரந்தர அலுவலக ஊழியராக பணியமர்த்த கருத்திற் கொள்ளப்படுவார்.

**பிரதி பயன்கள் :**

ஒப்பந்த சேவைக் காலத்தினுள் மாதாந்தம் ரூ. 100,000/- இலான நிலையானகொடுப்பனவொன்று (EPF/ETF இற்குட்பட்டு) செலுத்தப்படும்.

**விண்ணப்பிக்க வேண்டிய இறுதி திகதி**

2025 ஜூலை மாதம் 07ம் திகதி

**விண்ணப்பிக்க வேண்டியமுறை**

குறித்த தகுதிகளையுடைய அபேட்சகர்கள் சுய விபர கோவை, அத்தாட்சிப்படுத்தப்பட்ட கல்வி/ தொழிற் சான்றிதழ்களின் பிரதிளுடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.விண்ணப்பத்தின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியினை தெளிவாகக் குறிப்பிடவும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டிராத அல்லது பிழையான தகவல்களை கொண்டிருக்கும் எந்தவொரு விண்ணப்பப்படிவமும் ஆட்சேர்ப்பு படிமுறையின் எக்கட்டத்திலும் எவ்வித முன்னறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். சிறுபட்டியலிடப்பட்ட விண்ணப்பதாரிகளை மாத்திரம் நேர்முகத்தேர்விற்கு அழைப்பதற்கு அல்லது ஆட்சேர்ப்பினை ஒத்திவைப்பதற்கு அல்லது ஆட்சேர்ப்பை இரத்துச் செய்வதற்கான அதிகாரம் வங்கிக்கே உரியது.

ප්‍රාදේශීය සංවර්ධන බැංකුව
பிரதேச அபிவிருத்தி வங்கி
RDB Regional Development Bank

பிரதான மனிதவள அதிகாரி
பிரதேச அபிவிருத்தி வங்கி.
இல.933, கண்டி வீதி, வெதமுல்ல, களனி.
0112 03 54 54 | www.rdb.lk